**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 03 July-September 2024**

# தலைப்பு: திராவிட இயக்க பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண்ணியம்

**ப.விஜயராஜ்,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ் உயராய்வுத்துறை**
**சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் -641602**

## முன்னுரை

கவிஞர்களின் உள்ளத்திலிருந்து வெளிவரக்கூடிய கவிதைகள் அனைத்தும் அவரவர் உணர்ச்சிகளின் வெளிப்பாடேயாகும். புதையுண்ட அத்தனையும் பெயர்த்தெடுத்தது போல் கவிஞர்களின் வரிகளில் வந்து நிற்கும். அவை காலங்காலமாய்த் தேக்கி வைத்த ஏக்கங்களாய் வாசகர்களின் மனங்களை அவை வருடவும்கூடும்.. மேலும் அவை அடிமைப்படுத்தப்பட்டவர்களின் சுதந்திர வேட்கைகளாய்த் தோன்றும். சம உரிமைகளை நிலைநிறுத்த எழுந்த வார்த்தைகளாய் மாறும். பெண்களின் நிலை கண்டு வருந்திய ஆண் கவிஞர்களின் கவிதைகள் தமிழில் அதிகமாக வந்துள்ளன. இருப்பினும், சங்க காலத்திலிருந்தே பெண்களே பெண்ணியம் பேசவிளைந்ததும் கருத்தில் கொள்ள வேண்டித்தான் உள்ளது. சங்க காலம் தொட்டு இன்றுவரையும் பெண் கவிஞர்கள் நிறையபேர் உள்ளனர்.இருப்பினும், இந்தக் கட்டுரையின் ஆய்வு எல்லை கருதி கனிமொழி, சல்மா, ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகிய மூவர் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களின் கவிதைகளில் காணலாகும் பெண்ணியம் பற்றிய கருத்துக்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சமுதாயத்தில் பெண் :

பெண்களின் வாழ்க்கையானது பிறந்த வீடு, புகுந்த வீடு என்ற இரண்டு காலகட்டங்களைக் கொண்டிருக்கிறது.. ஒரு பெண் என்பவள் குறிப்பிட்ட வயதிற்கு மேல் ஒரு ஆணின் துணையோடுதான் வாழ வேண்டும் என்பது இந்தச் சமூகத்தில் இருந்துவரும் எழுதப்படாத சட்டம். பெண் பிறந்த வீட்டில் இருக்கும்போது தாய் தந்தை கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் சுய முடிவு எடுப்பதில் சிக்கல்கள் ஏற்படுகிறது. புகுந்த வீட்டிற்குச் சென்ற பின்பும் அவளின் கணவனின் சொல்கேட்டு நடக்க வேண்டியும்,உறவுமுறைகளுடன் ஒன்றி வாழவேண்டியும் உள்ளது. பெண்களின் சுய விருப்பு வெறுப்புகளுக்கு எப்போதும் இடம் கிடைப்பதே இல்லை,என்பதை

எனக்கென்று சரித்திரமில்லை
நீங்கள் கற்றுத் தந்ததே நான்
வார்த்துத் தந்ததே நிஜம்" 1

என்று, கனிமொழி அவர்கள் தன்னுடைய கருவறை வாசனை கவிதை தொகுப்பில் பதிவு செய்கிறார்.

மேலும் பெண்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு எப்போதும் வாழ்க்கை நகர்த்தப்படுவதில்லை. அவர்களால் அது முடிவதும் இல்லை. காரணம், இச்சமூகத்தில் பல்வேறு பொறுப்புகள் பெண்களுக்கென்று ஒதுக்கப்படுகிறது. அத்தகைய பொறுப்புகளில் இருந்து அவளால் எளிதில் விடுபட இயல்வதில்லை.

"கணவர் கையில் மனைவி டிக்கெட்
குழந்தை கையில் அம்மா டிக்கெட்
பெற்றோர் கையில் மகள் டிக்கெட்
அலுவலர்கையில் ஆபிஸர் டிக்கெட்" 2

என்று, இந்தச் சமூகம் பெண்களுக்கென்றே சில கட்டுப்பாடுகளை இன்றைக்கும் திணித்துக் கொண்டு தான் இருக்கிறது. அத்தகைய கட்டுப்பாடுகள் தகர்த்தப்பட வேண்டியவைகள் மட்டுமல்ல. உடைக்கப்பட வேண்டியவை கூட என்பதே ஒவ்வொரு பெண்ணின் மனக்குமுறலாகவும் உள்ளது.

**குடும்பத்தில் பெண்**:

மணக்கோலத்தில் சீரும் சிறப்புமாக அழைத்து வரப்படக்கூடிய பெண், புகுந்த வீட்டிற்குள் வந்தவுடன் அவளுக்கென்று ஒரு குடும்பம் என்ற பொறுப்புகூடிய விடுகிறது. குடும்பவாழ்க்கைக்கேன்றே பல தியாகங்களை பெண்ணானவள் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. கட்டிய கணவனுக்காகக் கல்லையும் கடித்துருக்கத் தயாராகிறாள். ஆரம்பத்தில் மணக்கோலத்தில் இருப்பவளைக் கண்டு ஆசையாய் மகிழ்ந்து அவளிடத்தில் இன்பம் அனுபவித்து வந்தகணவன்,அவள் குழந்தை பெற்றவுடன் அவளின் உடல் அமைப்பு கண்டு அவளை ஒதுக்குவதாக,

"நான் என்ன செய்ய?
என் நசிவைப் போலத்தான்
இந்தப் பிரசவக் கோடுகளும்
எளிதில் செப்பனிட முடிவதில்லை
வெட்டி ஒட்டிவிட இவ்வுடல் காகிதம் இல்லை" 3

என்று, உடல் சார்ந்த விஷயங்களிலும் பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிகளை சல்மா பதிவு செய்கிறார்.

பெண் என்பவளின் ஆசைகள் எல்லாம் இந்த உலகில் அதிகபட்சமாக, ஆணுக்கு இணையான இன்பங்களையாவது அனுபவித்து வாழ வேண்டும் என்பதேயாகும். ஆனால் அத்தகைய சூழல் என்பது குடும்ப வாழ்க்கையில் கிடைப்பதே இல்லை என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாய்,

என் வாழ்க்கை பூச்சிக்கா?

பூச்சி வாழ்க்கை எனக்கா? 4

என்று, ஆண்டாள் பிரியதர்ஷினி கவிதை படைக்கிறார். பெண்கள் பறக்க நினைப்பதோ பட்டாம்பூச்சியாய். ஆனால் அத்தகைய வாய்ப்பு பட்டாம்பூச்சிக்குக் கிட்டியது போல் அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்று பெண்களின் குடும்ப சூழலைப் பதிவு செய்கிறார்.

**ஆணாதிக்கம்**:

காப்பியக் காலம் தொட்டு இன்று வரை பெண் என்பவள் ஒரு போதைப் பொருளாகவும், பணயக் கைதியாகவுமே மாறிப் போயிருக்கிறாள். மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் பெண் என்பவளைக் கருவாய்க் கொண்டு காப்பியம் எழுதப்பட்டிருந்தாலும் இரண்டிலுமே பெண் என்பவள் பந்தயக் கருவியாகவும், பணயக் கருவியாகவுமே ஆண்களால் முன்னிறுத்தப்பட்டிருக்கிறாள்.

என்பதை,

“பந்தயங்களில் பணயமாக்கப்பட்டேன்
கோயில்களில்
விக்கிரகங்களாக்கப்பட்டேன்
எனக்காகப் போர்தொடுத்தார்கள்
கவர்ந்தவனிடத்திலிருந்து மீட்டார்கள்
காவியம் படைத்தார்கள்
உடமையாய் உரியவளாய்
உயிரற்ற ஜடப்பொருளாய்
ஆகிப்போனேன்”5

என்று, இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் என்பவள் உயிர் இருந்தும் உரிமை இருந்தும் உயிரற்ற ஜடப்பொருளாய் மாறிப்போனதைக் கனிமொழி தனது கவிதையில் பதிவு செய்கிறார்.

ஆணாதிக்கம் என்பது பெண்களின் விருப்பத்திற்கு மாறான ஒன்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளச் செய்வதும், பிடித்த ஒன்றை ஏற்க விடாமல் மறுக்கச் செய்வதுமே ஆகும். அப்படியாகப் பெண்கள் அணியும் ஆடைகளில் கூட கணவனுக்கு பிடித்த ஒன்றையே அவர்கள் அணிய வேண்டுமென்ற எதிர்பார்ப்பு உள்ளது. இந்த ஆதங்கத்தின் வெளிப்பாடாகும்,

"எனக்கென
நீ வாங்கியது தான் இந்த உடை
அதனை அணிந்து கொள்ள வேண்டுமென்ற
உன் விருப்பத்தில்
மிகுந்திருக்கும் பிரியத்தை
வியந்தபடி அதனை
அணிய முயல்கிறேன்
-------------------------
உடைகளுக்கேற்ப அமையாத
உடலின் அளவை மாற்றுவதில்
தவறில்லை என்கிறாய்"6

என்று, சல்மா கவிதை படைக்கிறார். உடைகளின் பிரியங்கள் கூட பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. சில ஆணாதிக்கவாதிகளால் என்று தனது கவிதையில் அவர் குறிப்பிடுகிறார்.

## தீண்டாமை:

இந்தச் சமுதாயத்தில் சாதி மத பாகுபாடுகள் ஒழிக்கப்படலாம். சாதிய அடக்குமுறைகள் அடக்கப்படலாம். ஆனால் பெரும்பாலும் பெண்களின் நிலை மட்டும் மாறுவதே இல்லை. பெண்களின் மீதான அடக்குமுறைகளும், தீண்டாமைகளும் முதலில் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை கனிமொழி தனது கவிதையில்,

"வடநாட்டில் குளிருக்குக்
கால்சராயும் பூட்சோடும் பூஜாரி
மோட்டார் போட்டாகி விட்டது
பெருமாள் கோயில் தேருக்கு
திருப்பதிக்குப் போகாவிட்டால்

தி.நகர் கிளையில் காணிக்கை செலுத்தலாம்

-------------------

இந்தோனேசியக் கோயிலில்
செருப்புப் போட்டுக் கொள்ளலாம்
சட்டம் எழுதியாயிற்று எல்லா சாதியும்
கோயிலுக்குள் வர"7

என்று குறிப்பிடுகிறார். மேலும் ஆண்களுக்கு மட்டும் இவ்வளவு சலுகைகளைக் கொடுத்த இந்தச் சமூகம்,

"எந்நாடு போனாலும்
தென்னாடு உடைய சிவனுக்கு
மாதவிலக்குள்ள பெண்கள்
மட்டும் ஆவதே இல்லை"8

என்று, பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சொல்கிறார். பெண்ணுக்கு மட்டும் ஏன் இத்தனை வேறுபாடுகள் என கேள்வி கேட்கும் கனிமொழி படைத்தவனால் கொடுக்கப்பட்டதை வைத்து மறுக்கப்படும் உரிமைகள் அநீதிக்கு மேலானது என்கிறார். இவ்வாறு கனிமொழி தன்னுடைய கவிதை மூலம் பெண்களின் நிலை கண்டு வருந்தி சமூகத்தின் மேல் காட்டத்தைத் தெரிவிக்கின்றார்.

மேலும், இன்றைய தலைமுறைப் பெண்கள் ராமன் போல் கணவன் வேண்டும் என எண்ணுவதுண்டு. அத்தகைய ராமனானவனே சீதையின் கற்பின் மீது களங்கம் விளைவிக்க அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னது புராணங்களில் குறிப்பிடப்படுகிறது. கடத்தப்பட்ட பெண் ஏதும் அறியாதவளாய் இருக்க, கடத்தப்பட்ட காரணம் கூட அறியாத போது, கடவுளாய்ப் போற்றப்படும் ராமனே சீதைக்குக் களங்கம் விளைவிக்கிறான். இதனைக் கனிமொழி தனது கவிதையில் தொன்மமாகப் பதிவு செய்கிறார்.

"பாவ விமோசனத்திற்கு
இராமனுக்காகக் காத்திருக்காதே
அவன் சீதையின்
அக்னிப் பிரவேச ஆயத்தங்களில்
ஆழ்ந்திருக்கிறான்"9

என்று, இன்றைய ஆண்களின் மனநிலைப் போக்குகளையும் பெண்ணிற்கு எதிரான தீண்டாமை நிலையையும் கனிமொழி தனது கவிதையில் பதிவு செய்கிறார்.

## ஆண், பெண் வேறுபாடு:

இன்றைய சூழல்களில் இட ஒதுக்கீடு மூலம் பெண்களின் நிலையை உயர்த்த முடியும். ஆணுக்கு இணையான சம உரிமை கொடுக்க முடியும் என்று முடிவுசெய்து பெண்களுக்குத் தனி இட ஒதுக்கீடுகள் கொடுக்கப்படுகின்றன. இவைகளை மறுக்கும் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆணுக்கு இணையான சம உரிமைகள் பெண்களுக்கு வேண்டாம். ஆணும், பெண்ணும் சமம் என்ற நிலையே அவர்களுக்கு வேண்டுமென்பதை வலியுறுத்துமாறு தன் கவிதைகளில் எடுத்துரைக்கிறார்.

இதனை,

“நிலவுக்கு
வானத்தில் ஒதுக்கீடா
அலைகளுக்கு
நெடுங்கடலில் ஒதுக்கீடா
பூக்களுக்கு
மரம் செடியில் ஒதுக்கீடா
--------------------
மகனுக்கும் மகளுக்கும்
கர்ப்பப்பை சமம்”[10]

என்று, கவிதை படைக்கிறார். அதாவது பிள்ளைகளைச் சுமக்கக் கூடிய கர்ப்பப்பை மட்டும் ஒன்றாக இருக்கும் போது பெண்ணை மட்டும் தகுதியால் பார்க்காமல் இடஒதுக்கீடு மூலம் சரிக்கட்டுவது நியாயமன்று என்று விளக்குகிறார்.

மேலும், வெள்ளையர்களிடமிருந்து கொடுக்கப்பட்ட சுதந்திரம் ஆண்களுக்கு மட்டுமானதன்று. ஆண்,பெண் இருவருக்குமானது. இப்போதோ வெள்ளையர்களிடமிருந்து பெறப்பட்ட சுதந்திரத்தைப் போலவே ஆண்களிடமிருந்தும் சுதந்திரத்தைக் கேட்டுப் பெறவேண்டிய அவல நிலைபெண்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை,

“சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை
பழைய முழக்கம்
அரியணை எங்கள் பிறப்புரிமை
புதிய முழக்கம்
______________
வெள்ளையனே வெளியேறு
பழைய முழக்கம்

ஆணாதிக்கமே வெளியேறு
புதிய முழக்கம்
ஆட்சி பீடம்
அர்த்தநாரீஸ்வரத் தத்துவத்தின்
பிறப்பிடமாகட்டும்
சம உரிமைகள் இருப்பிடமாகட்டும்"11

என்று, ஆண்டாள் பிரியதர்ஷினி கவிதை படைக்கிறார். அதனால் நாட்டைச் சுரண்டிக் கொண்டிருந்த வெள்ளையர்களை வெளியேற்றியது போலவே ஆணாதிக்கமும் விரைவில் வெளியேற்றப்பட வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.

## பெண் விடுதலை:

மண் விடுதலைக்குப் பிறகு பெண் விடுதலை தற்போது பேசுபொருள் ஆக்கப்பட்டுள்ளது. பெண் விடுதலை என்பது இந்தச் சமூகத்தில் பெண்ணின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுத்து வழி விடுவது, அவர்களின் சுய சிந்தனைகளுக்கு செவிமடுப்பது ஆகியவையேயாகும். இத்தனை காலம் பெண்களுக்கென்று தனியே விருப்பு வெறுப்புச் சூழல்களை இந்த சமூகம் அனுமதித்ததில்லை. எல்லாவற்றையும் மீறி சாதிக்கும் பெண்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்துள்ளது. இத்தகைய நிலை மாறிப் பெண் விடுதலை வேண்டும் அதற்குப்பெண்களே கட்டுப்படுத்தப்பட்ட அரண்களை உடைத்துமுதலில் வெளிவர வேண்டுமென்று சல்மாபின்வரும் தனது கவிதையின் மூலம் பதிவு செய்கிறார்.

"பாழ் வெளியில்
ஓர் அரண் அமைத்து
இன்றென்னைக் காக்கிறேன்
-------------------
என்னிடமிருந்ததையெல்லாம்
ஒவ்வொரு முறையும்
பலவந்தமாகப்
பறித்துச் சென்றீர்கள்
இன்று
இச்சாய்வு நாற்காலியில்
யாருக்கும் தயங்காமல்
கால்களை நீட்டி
அமர்ந்திருக்கிறேன்" 12

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

மேலும், விடியலுக்கான துவக்கம் என்பது பெண்களிடமிருந்தே முதலில் ஆரம்பிக்க வேண்டும் என்றும், அதற்கான பலன் முடிவிலே தெரியும் என்றும், அது பெண்களின் வெற்றிப்புள்ளியாக அமையுமென்றும் ஆண்டாள் பிரியதர்ஷினி தனது கவிதையில் பதிவிடுகிறார்.

"ஒவ்வொரு விடியலும்
பந்தயத் துவக்கம்
ஒவ்வொரு முடிவிலும்
வெற்றிப் புள்ளி
---------------
கால் இடறிக்
கீழே விழுந்தால்
கடமைத் தோட்டாக்கள்
துளைத்துப் பாயும்" 13

பெண்ணிய சுதந்திரம் தேடும் பெண்களே, அதற்கான கால்கோள் நாட்டாமல் கால் இடறிக் கீழேயே விழுந்து கிடந்தால் உங்களின் கடமைகள் ஏராளம் என்பதை நீங்கள் அறியாமலே போய்விடுவீர்கள் என்றும், உங்களின் இலக்குகளை எட்டிப் பிடிக்க நீங்களே முன் வர வேண்டுமென்றும் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் பெண் சமூகத்திற்குக் குரல் கொடுக்கிறார்.

## முடிவுரை:

பெண்களுக்கான சுதந்திரம் என்பது பெண்கள் செய்ய விரும்பிய செயல்களை செய்யவிடுவதும், செய்ய விரும்பாத செயல்களை செய்யாமல் இருப்பதுவும் ஆகும். நவீன காலமாகச் சொல்லப்படும் இந்த 21ம் நூற்றாண்டிலும் பெண் கவிஞர்கள் பெண்ணுரிமைகளையும், வேதனைகளையும், மனக்குமுறல்களையும் கவிதைகளாக வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது சிந்திக்க வேண்டியதாக உள்ளது. இட ஒதுக்கீடுகள் இருந்தும் சரி செய்ய முடியாத இவர்களின் ஏக்கங்கள் இனி மேலாவது சரி செய்யப்பட வேண்டும் என்பதே இந்த சமூகத்தில் பெண்களுக்கான வேண்டுகோளாக உள்ளது. இதனையே பெண்ணிய கருத்துகளின் வாயிலாக அறியமுடிகிறது.

சான்றெண்விளக்கம்:

1. கனிமொழி, கருவறை வாசனை, ப.15
2. ஆண்டாள் பிரியதர்ஷினி, சுயம் பேசும் கிளி, ப.56
3. சல்மா, ஒரு மாலையும் இன்னொரு மாலையும், ப.80,81

4. ஆண்டாள் பிரியதர்ஷினி, சுயம் பேசும் கிளி, ப.159
5. கனிமொழி,கருவறை வாசனை, ப.18
6. சல்மா, பச்சை தேவதை, ப.42
7. கனிமொழி, அகத்திணை, ப.48
8. மேலது, ப.48
9. மேலது, ப.31
10. ஆண்டாள் பிரியதர்ஷினி, சுயம் பேசும் கிளி, ப.117
11. மேலது, ப.118
12. சல்மா, ஒரு மாலையும் இன்னொரு மாலையும், ப.42
13. ஆண்டாள் பிரியதர்ஷினி, சுயம் பேசும் கிளி, ப.55

**துணை நூற்பட்டியல் :**

கனிமொழி, கருவறை வாசனை, நான்காம் பதிப்பு – 2012, வ.உ.சி. நூலகம், சென்னை.

சல்மா, ஒருமாலையும் இன்னொரு மாலையும், பதினொன்றாம் பதிப்பு – 2000, காலச்சுவடு பதிப்பகம் , நாகர்கோவில்.

கனிமொழி, அகத்திணை நான்காம் பதிப்பு - 2012 வ.உ.சி. நூலகம், சென்னை.

ஆண்டாள் பிரியதர்ஷினி, சுயம்பேசும் கிளி, முதற்பதிப்பு – 2001, ராகவேந்திரா வெளியீடு, சென்னை.

**ISSN: 2320-4842**
**Vol-18 No. 03 July-September 2024**

சல்மா, பச்சைத்தேவதை,
பதினொன்றாம் பதிப்பு – 2000,
காலச்சுவடு பதிப்பகம்,
நாகர்கோவில்.